அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 53 - பரத நாட்டியம்

### புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................ ✓ △ $\frac{4}{5}$

............................................................................

............................................................................

(ii) ............................................................................ ✓ △ $\frac{3}{5}$

............................................................................

............................................................................

(iii) ............................................................................ ✓ △ $\frac{3}{5}$

............................................................................

............................................................................

(03)   (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்களை தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி “வினாப்பத்திரம் II” எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

# க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2018

## 53 - பரதநாட்டியம்

## புள்ளித்திட்டம்

**வினாத்தாள் - I** 50 x 2 = 100 புள்ளிகள்

**வினாத்தாள் - II**

இதில் இரு பகுதிகள் உண்டு. பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

### பகுதி - I

**வினா இலக்கம் 1**

i. 02 புள்ளிகள் ii. 04 புள்ளிகள்

iii. அ) 08 புள்ளிகள் ஆ) 06 புள்ளிகள் - 20 புள்ளிகள்

**வினா இலக்கம் 2**

i. 03 புள்ளிகள் ii. 03 புள்ளிகள்

iii. 02 புள்ளிகள் iv. 06 புள்ளிகள்

v. 06 புள்ளிகள் - 20 புள்ளிகள்

**வினா இலக்கம் 3**

i. அ) 02 புள்ளிகள் ஆ) 08 புள்ளிகள்

ii. அ) 02 புள்ளிகள் ஆ) 08 புள்ளிகள் - 20 புள்ளிகள்

### பகுதி - II

**வினா இலக்கம் 4**

i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள்

iii. 04 புள்ளிகள் iv. 04 புள்ளிகள்

v. 04 புள்ளிகள் - 20 புள்ளிகள்

**வினா இலக்கம் 5** - 20 புள்ளிகள்

**வினா இலக்கம் 6** - 20 புள்ளிகள்

**வினா இலக்கம் 7** - 20 புள்ளிகள்

i. 02 புள்ளிகள் ii. 08 புள்ளிகள்

iii. 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 8** - 20 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| **வினாத்தாள் I** | - | 100 புள்ளிகள் |
| **வினாத்தாள் II** | - | 100 புள்ளிகள் |
| **மொத்தம்** | - | 200 புள்ளிகள் |
| **இறுதிப்புள்ளி** - 200 ÷ 2 | = | 100 புள்ளிகள் |

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

08.08.2018 / 0830 - 1030

නැටුම් (භරත) I
நாட்டியம் (பரதம்) I
Dancing (Baratha) I

53 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. சிவன் ஐந்தொழில்களையும் ஆற்றுவதற்காக ஆனந்தத்தாண்டவம் ஆடும் திருத்தலம்
   (1) திருவண்ணாமலை (2) சிதம்பரம் (3) திருவானைக்கா
   (4) திருவீழிமிழலை (5) திருவலஞ்சுழி

2. இசைக் கச்சேரிகளிலும், நாட்டியக் கச்சேரிகளிலும் இறுதியாக அமையும் உருப்படி
   (1) வர்ணம் (2) பதம் (3) கீர்த்தனம் (4) ஜாவளி (5) தில்லானா

3. யாழ்ப்பாணம் நடனக் கல்லூரியினை ஆரம்பித்து வைத்தவர்
   (1) சேர். பொன். இராமநாதன் (2) திரு. பரம் தில்லைராஜா
   (3) திரு. வி.ஆர். இராசநாயகம் (4) திரு. சு. நடேசபிள்ளை
   (5) திரு. சி.வை. தாமோதரம்பிள்ளை

4. 'அபிநயதர்ப்பணம்' என்னும் நூலை தமிழில் மொழி பெயர்த்தவர்கள்
   (1) உ.வே.சாமிநாதையர், வீரராகவன்
   (2) ஆனந்தகுமாரசாமி, நந்திகேஸ்வரர்
   (3) ஸ்ரீராமதேசிகன், வீரராகவன்
   (4) ஆனந்தகுமாரசாமி, உ.வே. சாமிநாதையர்
   (5) நந்திகேஸ்வரர், ஸ்ரீராமதேசிகன்

5. திஸ்ரஜாதி துருவதாளம் மிஸ்ர கதி அடையும்போது எடுத்துக்கொள்ளும் எண்ணிக்கை
   (1) 72 (2) 77 (3) 90 (4) 96 (5) 99

6. கண்டிய நடனத்தில் காணப்படும் வண்ணம் ஆடலில் சிங்கம் ஆமையால் ஏமாற்றப்பட்டுக் கிணற்றுக்குள் தள்ளி விடப்பட்ட கதையைக் கூறுவது
   (1) கஜக வண்ணம் (2) மயூர வண்ணம் (3) கிரளா வண்ணம்
   (4) கணபதி வண்ணம் (5) சிங்கராஜ வண்ணம்

7. பாலை நிலத்தைச் சார்ந்த ஆடல் வகை
   (1) ஆய்ச்சியர் குரவை (2) குன்றக் குரவை (3) வேட்டுவ வரி
   (4) வெறியாடல் (5) துணங்கைக் கூத்து

8. "எண்ணெண் கலையும் இசைந்துடன் போக ..." என்ற பாடலடியின் மூலம் அறுபத்து நான்கு கலைகள் பற்றிக் கூறும் நூல்
   (1) காமசூத்திரம் (2) சிலப்பதிகாரம் (3) தொல்காப்பியம்
   (4) நாட்டிய சாஸ்திரம் (5) சரஸ்வதி அந்தாதி

9. சிவனது கரணங்கள் சிற்பங்களாக முதலில் வடிவமைக்கப்பட்ட ஆலயம்
   (1) மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் (2) பிரகதீஸ்வரர் ஆலயம்
   (3) கும்பகோணம் சாரங்கபாணி ஆலயம் (4) கங்கை கொண்ட சோழபுர ஆலயம்
   (5) சிதம்பர நடராஜர் ஆலயம்

**10.** இலங்கையின் நடனப் பேராசான் திரு.ஏரம்பு சுப்பையா அவர்களால் நிறுவப்பட்ட நடனக் கலையகம்
(1) கலாபவனம் (2) கலைக்கோயில் (3) கலாமந்திர்
(4) கலாலயம் (5) நாட்டிய ஷேத்ரா

**11.** நாட்டிய சாஸ்திரத்தை தெலுங்கில் மொழி பெயர்க்க முனைந்த வடமொழிப் புலவர்
(1) எஸ்.என்.ஶ்ரீராமதேசிகன் (2) நந்திகேஸ்வரர்
(3) மனோ மோகன் கோஷ் (4) மானவல்லி ராமகிருஷ்ண கவி
(5) வீரராகவையர்

**12.** மெய்த்தி, ஜகோய், ராஸ போன்ற மரபுகளைக் கொண்டுள்ள சாஸ்திரிய நடனம்
(1) கதகளி (2) குச்சுப்புடி (3) மணிப்புரி
(4) பரதநாட்டியம் (5) ஒடிசி

**13.** அஸம்யுத ஹஸ்தங்களுள் ஒன்றின் பெயர் கொண்ட காற்றுக்கருவி
(1) புல்லாங்குழல் (2) நாதஸ்வரம் (3) முகவீணை
(4) ஹார்மோனியம் (5) சங்கு

**14.** சிங்களக் கலை மரபில் காலத்தால் முந்திய கிராமியக் கலைப் படைப்பாக விளங்கும் சொக்கரியில் சொக்கரி என்பது
(1) பிரதான பாத்திரம் (2) அரங்கு (3) ஒப்பனை
(4) தாள வாத்தியம் (5) உடை

**15.** தமிழ்ப் பதங்கள் இயற்றியோரில் காலத்தால் மூத்தவரும், முன்னோடியாகத் திகழ்பவருமான வாக்கேயக்காரர்
(1) கவிகுஞ்சர பாரதி (2) கனம் கிருஷ்ணையர்
(3) மழவை சிதம்பர பாரதியார் (4) சீர்காழி முத்துத் தாண்டவர்
(5) ஊத்துக்காடு வேங்கட சுப்பையர்

**16.** முதலாவது மண்டி அடவினை ஒரு தரம் அபிநயிப்பது போல் அமைந்த பாதபேதம்
(1) ஆலிடம் (2) மோடிதம் (3) சமசூசி
(4) ஸ்வஸ்திகம் (5) ப்ரத்யாலீடம்

**17.** இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறையில் முதலாவது தலைவராக 1996 ஆம் ஆண்டு பதவி ஏற்றுக் கொண்டவர்
(1) பேராசிரியர் அ.சண்முகதாஸ் (2) பேராசிரியர் கா.சிவத்தம்பி
(3) பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (4) கலாநிதி கிருஷாந்தி ரவீந்திரா
(5) பேராசிரியர் சபா. ஜெயராசா

**18.** தகதிமி தகதிமி தகதிமி தக ததிங் /, கி ண தொம் த திங், கி / ண தொம் த திங், கி ண தொம் //
இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங்கிணதொம் அமைந்துள்ள ஜாதி
(1) திஸ்ரம் (2) சதுஸ்ரம் (3) கண்டம்
(4) மிஸ்ரம் (5) சங்கீர்ணம்

**19.** ஒடிசி நடனத்தின் தொடக்கத்தில் போற்றித் துதிக்கப்படும் தெய்வம்
(1) கார்த்திகேயன் (2) அகிலாண்டேஸ்வரி (3) ஜெகன்நாதர்
(4) மீனலோஜனி (5) ஐங்கரன்

**20.** பதவர்ணங்களில் தீர்மானங்கள் முடிவடைந்ததும் இடம்பெறுவது
(1) கோர்வை (2) ஜதி (3) தாளம் (4) அடவு (5) அறுதி

**21.** ஆத்மாஸ்த, பராஸ்த என்ற இரு பிரிவுகளையுடைய ரஸம்
(1) ஸ்ருங்காரம் (2) பீபத்ஸம் (3) பயானகம்
(4) ஹாஸ்யம் (5) ரௌத்ரம்

**22.** கதகளி ஆடல் பற்றி விளக்கும் நூல்
(1) ஹஸ்த முத்ராவளி (2) ஹஸ்த லக்ஷணதீபிகா
(3) அபிநய சாரசம்புடம் (4) அபிநய நவநீதம்
(5) அபிநயதர்ப்பணம்

**23.** “நாகம் புயத்திற் கட்டி நஞ்சு கழுத்திற்கட்டி ....” என்ற பாடலில் குறிப்பிடப்படுபவர்
(1) சிவன் (2) முருகன் (3) விஷ்ணு (4) மன்மதன் (5) இந்திரன்

**24.** திருமகள் ஆடிய கூத்து
(1) அல்லியம் (2) மல்லாடல் (3) பாவை (4) துடி (5) பேடு

25. எழுபத்திரண்டு மேளகர்த்தா சக்கரத்தில் இந்து, ரிஷி ஆகிய சக்கரங்களில் முதலாவதாக இடம்பெறும் இராகங்கள் முறையே
(1) காயகப்ரியா, தவளாம்பரி
(2) மாரரஞ்ஜனி, காந்தாமணி
(3) ஹனுமதோடி, சுவாம்போதி
(4) யாகப்ரியா, ஸுசரித்ரா
(5) கனகாங்கி, ஸாலகம்

26. நளவெண்பாவில் இடம்பெறும் "நாற்குணமும் நாற்படையாய் ....." என்ற பாடலில் குறிப்பிடப்படும் நான்கு குணங்கள்
(1) வீரம், பயம், கோபம், அழுகை
(2) அற்புதம், ஹாஸ்யம், கருணை, சாந்தம்
(3) வெறுப்பு, ஆச்சரியம், கோபம், சாந்தம்
(4) அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
(5) தாமதம், ராஜஸம், சாத்விகம், இரக்கம்

27. இலங்கையில் வழக்கிலுள்ள வடமோடி, தென்மோடி, வசந்தன் கூத்து ஆகியவற்றில் இன்றியமையாத வாத்தியம்
(1) மிருதங்கம்
(2) மத்தளம்
(3) தவில்
(4) தபேலா
(5) தப்பு

28. "ஒளி செய்தான் கதிர்க்கோமான்......."என்னும் பாடலடியில் கதிர்க்கோமான் என்பதை அபிநயிக்கப் பயன்படுத்தப்படும் வலது கை, இடது கை முத்திரைகள் முறையே
(1) கபித்தம், அலபத்மம்
(2) பதாகம், அலபத்மம்
(3) சூசி, தாம்ரசூடம்
(4) கபித்தம், கபித்தம்
(5) கடகாமுகம், சிகரம்

29. 'வட இலங்கை நாட்டார் அரங்கு' என்னும் நூலின் ஆசிரியர்
(1) பேராசிரியர் கா. சிவத்தம்பி
(2) பேராசிரியர் வி. சிவசாமி
(3) பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
(4) கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை
(5) பேராசிரியர் சு. வித்தியானந்தன்

30. "கன்னகு திரள்புயக் கணவன் ...."என்ற கம்பராமாயணப் பாடலில் 'அன்னமும் துயரக் கடல் அடிவைத்தாள் அரோ' என்ற பகுதியை அபிநயிக்கும்போது உருவாகும் ஸ்தாயி பாவம்
(1) ரதி
(2) க்ரோத
(3) ஷோக
(4) பய
(5) விஸ்மய

31. குச்சுப்புடி நடனத்தில் அதிகமாகப் போற்றப்படும் ஆடல்
(1) ராஸலீலா
(2) ராமனாட்டம்
(3) ரக்வால்
(4) புங்சோலம்
(5) பாமா கலாபம்

32. 'தண்ணுமை' என்று குறிப்பிடப்படும் இசைக்கருவி
(1) தவில்
(2) தபேலா
(3) உடுக்கு
(4) மிருதங்கம்
(5) மத்தளம்

33. இரு திரிபதாகக் கைகளைப் பயன்படுத்தி அபிநயிப்பதன் மூலம் "மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து .... "என்ற அபிராமி அந்தாதிப் பாடலில் கருத்து வெளிப்படுத்தப்படும் சொல்
(1) மனிதர்
(2) தேவர்
(3) முனிவர்
(4) அபிராமி
(5) சிவன்

34. அஷ்டபதியில் வெளிப்படுத்தப்படும் பாவம்
(1) தாஸ்ய பாவம்
(2) சாக்கிய பாவம்
(3) வாத்சல்ய பாவம்
(4) காந்த பாவம்
(5) மதுர பாவம்

35. "வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து ......." என்ற பாடலில் தன் திருமணம் நடைபெறுவதாகக் கனவு காணும் நாயகி
(1) ஆண்டாள்
(2) மீரா
(3) பத்மாவதி
(4) வசந்தவல்லி
(5) தேவகி

36. சங்கீத கலாநிதிப் பட்டத்தினை முதலில் பெற்றுக் கொண்ட நாட்டியக் கலைஞர்
(1) திருமதி. ருக்மணி அருண்டேல்
(2) திருமதி. பாலசரஸ்வதி
(3) வழுவூர் இராமையாபிள்ளை
(4) திருமதி. கௌரி அம்மாள்
(5) பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

37. அதிகமான ஜாவளிகள் அமைந்துள்ள மொழி
(1) வடமொழி
(2) தமிழ்
(3) ஹிந்தி
(4) தெலுங்கு
(5) பாளி

38. வீட்டுப் பாவனைப் பொருட்களைக் கைகளில் வைத்துக் கொண்டு ஆடும் ஆடல்
(1) பொம்மலாட்டம் (2) ஏந்தல் நடனம் (3) குதிரையாட்டம்
(4) கும்மி (5) கொழுந்து நடனம்

39. மிஸ்ர அலாரிப்பின் தீர்மானப்பகுதியில் இடம்பெறும் தக ததிங் கி ண தொ ம்,; தக ததிங் கிண தொம்,; தக ததிங் கிணதொம், என்பது அமைந்துள்ள யதி அமைப்பு
(1) சம யதி (2) விசம யதி (3) டமருக யதி
(4) கோபுச்ச யதி (5) மிருதங்க யதி

40. "திக்கிட - உ தரக - டன் - கிண்ணம் ...... " என்னும் பாடல் அடி இடம்பெறும் கௌத்துவம்
(1) சண்முக கௌத்துவம் (2) விஷ்ணு கௌத்துவம்
(3) நடேச கௌத்துவம் (4) சக்தி கௌத்துவம்
(5) கணபதி கௌத்துவம்

41. 'தில்லானா' என்ற உருப்படியில் அழகுக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் அடவு
(1) மகுட அடவு (2) தட்டுமெட்டடவு (3) மெய்யடவு
(4) சறுக்கல் அடவு (5) மண்டியடவு

42. 'தக ஜெணு தகுந்தரி' என்பதன் எண்ணிக்கைக்குச் சமனாக அமையும் பிறிதொரு அமைப்பு
(1) தகதிமி தகதிமி (2) தகிட தகிட
(3) தகிட தகதிமி (4) தகதிமி தகதகிட
(5) தக தகிட

43. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கௌரவ முதுகலைமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நாட்டியக் கலைஞர்
(1) திரு. ம. கயிலாயபிள்ளை (2) திரு. வி. கே. நல்லையா
(3) திரு. ய. தொம்மைக்குட்டி (4) திரு. ந. வீரமணிஐயர்
(5) திரு. வெ. இராசரத்தினம்

44. அதீதம், அநாகதம், சமம் ஆகிய பிரிவுகளைக் கொண்டது
(1) அங்கம் (2) க்ரஹம் (3) காகபாதம் (4) புலுதம் (5) குரு

45. நாட்டிய நாடகம் ஒன்றில் மங்கள இசை, பிரகாசமான ஒளி என்பவற்றின் மூலமாக புலப்படுத்தப்படும் காட்சி
(1) சுவாமி திருவீதி உலா வருதல் (2) போர்க் காட்சி (3) இயற்கை அனர்த்தம்
(4) வயற் காட்சி (5) பூஞ்சோலை

46. நாயக்கர் காலத்தில் மெலட்டூர் பாகவதமேளா நாட்டிய நாடகத்தில் பங்கேற்றவர்கள்
(1) தேவதாசிகள் (2) தலைக்கோலிகள் (3) அரசவை நர்த்தகிகள்
(4) தேவலோக நடனப் பெண்கள் (5) அந்தணர்கள்

47. நடராஜ திருவுருவத் தத்துவத்தில் ஊன்றிய திருவடி குறிப்பது
(1) விருப்பு வெறுப்பற்ற தன்மை (2) மங்கள சொரூபி (3) ஆணவத்தை அழித்தல்
(4) அழிவற்ற தன்மை (5) அறியாமையை அழித்தல்

48. "குயிலே உனக்கனந்த கோடி நமஸ்காரம் குமரன் வரக்கூவுவாய்....." என்ற தூதுப் பதத்தை இயற்றியவர்
(1) சுப்ரமணிய பாரதியார் (2) பாபநாசம் சிவன் (3) கவிகுஞ்சர பாரதி
(4) சுத்தானந்த பாரதி (5) முத்துத் தாண்டவர்

49. தீர்மானம் ஒன்றினை அமைக்கும்போது மிகப் பொருத்தமான சொற்கட்டு
(1) தா தெய் தெய்த தித் தெய் தெய்த (2) தீஹுத தத்திமி தாகத ஜெம்
(3) தகதிமி தகதிமி திதி தெய் (4) தகிட தகிட தகிட தகிட
(5) தெய் ஹுத் தெய்கி தெய்யா தெய்யி

50. சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முதல்வராக நியமிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்
(1) திரு. இராசமாணிக்கம் பிள்ளை (2) திரு. வச்ரவேலு முதலியார்
(3) திரு. சுப்பிரமணியம் பிள்ளை (4) திரு. கோமதி சங்கர ஐயர்
(5) திரு. சிவானந்தம் பிள்ளை

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

| විෂයය අංකය<br>பாட இலக்கம் | 53 | විෂයය<br>பாடம் | பரத நாட்டியம் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 4 | 31. | 5 | 41. | 3 |
| 02. | 5 | 12. | 3 | 22. | 2 | 32. | 4 | 42. | 1 |
| 03. | 3 | 13. | 5 | 23. | 1 | 33. | 2 | 43. | 4 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 3 | 34. | 5 | 44. | 2 |
| 05. | 2 | 15. | 4 | 25. | 5 | 35. | 1 | 45. | 1 |
| 06. | 5 | 16. | 2 | 26. | 4 | 36. | 2 | 46. | 5 |
| 07. | 3 | 17. | 5 | 27. | 2 | 37. | 4 | 47. | 3 |
| 08. | 2 | 18. | 1 | 28. | 1 | 38. | 2 | 48. | 4 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 4 | 39. | 1 | 49. | 2 |
| 10. | 1 | 20. | 5 | 30. | 3 | 40. | 5 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

# வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

**முதலாம் பகுதி வினாவுக்கான குறிக்கோள்கள்**

1. சிவன் ஐந்தொழில்களையும் ஆற்றுவதற்காக ஆனந்த தாண்டவம் ஆடும் திருத்தலம் சிதம்பரம் என்பதை அறிந்து கொள்வர்.
2. இசைக்கச்சேரிகளிலும், நாட்டியக் கச்சேரிகளிலும் இறுதியாக அமையும் உருப்படி தில்லானா என்பதை அறிந்து கொள்வர்.
3. யாழ்ப்பாணம் நடனக்கல்லூரியினை ஆரம்பித்து வைத்தவர் திரு. வி ஆர். இராசநாயகம் என்பதை அறிந்து கொள்வர்.
4. அபிநயதர்ப்பணம் என்னும் நூலை தமிழில் மொழி பெயர்த்தவர்கள் உ.வே. சாமிநாதையர், வீரராகவன் ஆகியோர் என்பதனை அறிந்து கொள்வர்.
5. திஸ்ரஜாதி துருவதாளம் மிஸ்ரகதி அடையும் போது எடுத்துக் கொள்ளும் எண்ணிக்கை 77 என்பதைத் தெரிந்து கொள்வர்.
6. கண்டிய நடனத்தில் காணப்படும் வண்ணம் ஆடலில் சிங்கம் ஆமையால் ஏமாற்றப்பட்டுக் கிணற்றுக்குள் தள்ளிவிடப்பட்ட கதையைக் கூறுவது சிங்கராஜ வண்ணம் என்பதை அறிந்து கொள்வர்.
7. பாலை நிலத்தைச் சார்ந்த ஆடல் வகை வேட்டுவவரி என்பதை அறிந்து கொள்வர்.
8. எண்ணெண் கலையும் இசைத்துடன் போக....” என்ற பாடலடியின் மூலம் அறுபத்து நான்கு கலைகள் பற்றிக் கூறும் நூல் சிலப்பதிகாரம் என்பதை அறிந்து கொள்வர்.
9. சிவனது கரணங்கள் சிற்பங்களாக முதலில் வடிவமைக்கப்பட்ட ஆலயம் பிரகதீஸ்வரர் ஆலயம் என்பதை அறிந்து கொள்வர்.
10. இலங்கையின் நடனப் பேராசான் திரு. ஏரம்பு சுப்பையா அவர்களால் நிறுவப்பட்ட நடனக்கலையகம் கலாபவனம் என்பதை அறிந்து கொள்வர்.
11. நாட்டிய சாஸ்திரத்தை தெலுங்கில் மொழி பெயர்க்க முனைந்த வடமொழிப் புலவர் மானவல்லி ராமகிருஷ்ண கவி என்பதை அறிந்து கொள்வர்.
12. மெய்த்தி, ஐசோய், ராஸ போன்ற மரபுகளைக் கொண்டுள்ள சாஸ்திரிய நடனம் மணிப்புரி என்பதை அறிந்து கொள்வர்.
13. ஸம்யுத ஹஸ்தங்களுள் ஒன்றின் பெயர் கொண்ட காற்றுக் கருவி சங்கு என்பதைத் தெரிந்து கொள்வர்.
14. சிங்களக் கலை மரபில் காலத்தால் முந்திய கிராமியக் கலைப் படைப்பாக விளங்கும் சொக்கரியில் சொக்கரி என்பது பிரதான பாத்திரம் என்பதை அறிந்து கொள்வர்.
15. தமிழ்ப்பதங்கள் இயற்றியோரில் காலத்தால் மூத்தவரும், முன்னோடியாகத் திகழ்ந்தவருமான வாக்கேயக்காரர் சீர்காழி முத்துத் தாண்டவர் என்பதை அறிந்து கொள்வர்.
16. முதலாவது மண்டி அடவினை ஒரு தரம் அபிநயிப்பது போல் அமைந்த பாத பேதம் மோடிதம் என்பதைத் தெரிந்து கொள்வர்.
17. இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறையில் முதலாவது தலைவராக 1996 ஆம் ஆண்டு பதவி ஏற்றுக் கொண்டவர் பேராசிரியர் சபா. ஜெயராசா என்பதை அறிந்து கொள்வர்.

18. தகதிமி தகதிமி தகதிமி தக ததிங் /, கிண தொம் த திங், கி / ண தொம் த திங், கிண தொம் / / இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ததிங் கிணதொம் அமைந்துள்ள ஜாதி திஸ்ரம் என்பதைத் தெரிந்து கொள்வர்.

19. ஒடிசி நடனத்தின் தொடக்கத்தில் போற்றித் துதிக்கப்படும் தெய்வம் ஜெகன்நாதர் என்பதை அறிந்து கொள்வர்.

20. பதவர்ணங்களில் தீர்மானங்கள் முடிவடைந்ததும் இடம் பெறுவது அறுதி என்பதை அறிந்து கொள்வர்.

21. ஆத்மாஸ்த, பராஸ்த என்ற இரு பிரிவுகளையுடைய ரஸம் ஹாஸ்யம் என்பதை அறிந்து கொள்வர்.

22. கதகளி ஆடல் பற்றி விளக்கும் நூல் ஹஸ்த லக்ஷண தீபிகா என்பதை அறிந்து கொள்வர்.

23. "நாகம் புயத்திற் கட்டி நஞ்சு கழுத்திற் கட்டி" என்ற பாடலில் குறிப்பிடப்படுபவர் சிவன் என்பதைத் தெரிந்து கொள்வர்.

24. திருமகள் ஆடிய கூத்து பாவை என்பதை அறிந்து கொள்வர்.

25. எழுபத்திரண்டு மேளகர்த்தா சக்கரத்தில் இந்து, ரிஷி ஆகிய சக்கரங்களில் முதலாவதாக இடம்பெறும் இராகங்கள் முறையே கனகாங்கி, ஸாலகம் என்பதைத் தெரிந்து கொள்வர்.

26. நளவெண்பாவில் இடம்பெறும் "நாற்குணமும் நாற்படையாய்" என்ற பாடலில் குறிப்பிடப்படும் நான்கு குணங்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பதை அறிந்து கொள்வர்.

27. இலங்கையில் வழக்கிலுள்ள வடமோடி, தென்மோடி வசந்தன் கூத்து ஆகியவற்றில் இன்றியமையாத வாத்தியம் மத்தளம் என்பதை தெரிந்து கொள்வர்.

28. "ஒளி செய்தான் கதிர்கோமான்" என்றும் பாடலடியில் கதிர்க்கோமான் என்பதை அபிநயிக்கப் பயன்படுத்தப்படும் வலது கை, இடது கை முத்திரைகள் முறையே கபித்தம், அலபத்மம் என்பதை தெரிந்து கொள்வர்.

29. வடஇலங்கை நாட்டார் அரங்கு என்னும் நூலின் ஆசிரியர் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை என்பதை அறிந்து கொள்வர்.

30. "கன்னகு திரள்புயக் கணவன்..." என்ற கம்பராமாயணப் பாடலில் அன்னமும் துயரக் கடல் அடிவைத்தாள் அரோ என்ற பகுதியை அபிநயிக்கும் போது உருவாகும் ஸ்தாயி பாவம் ஷோக என்பதைத் தெரிந்து கொள்வர்.

31. குச்சுப்புடி நடனத்தில் அதிகமாகப் போற்றப்படும் ஆடல் பாமா கலாபம் என்பதனை அறிந்து கொள்வர்.

32. தண்ணுமை என்று குறிப்பிடப்படும் இசைக்கருவி மிருதங்கம் என்பதைத் தெரிந்து கொள்வர்.

33. இரு திரிபாதகக் கைகளைப் பயன்படுத்தி அபிநயிப்பதன் மூலம் மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து என்ற அபிராமி அந்தாதிப் பாடலில் கருத்து வெளிப்படுத்தப்படும் சொல் தேவர் என்பதைத் தெரிந்து கொள்வர்.

34. அஷ்டபதியில் வெளிப்படுத்தப்படும் பாவம் மதுர பாவம் என்பதைத் தெரிந்து கொள்வர்.

35. வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து என்ற பாடலில் தன் திருமணம் நடைபெறுவதாகக் கனவு காணும் நாயகி ஆண்டாள் என்பதை அறிந்து கொள்வர்.

36. சங்கீத கலாநிதிப் பட்டத்தினை முதலில் பெற்றுக்கொண்ட நாட்டியக் கலைஞர் திருமதி. பாலசரஸ்வதி என்பதைத் அறிந்து கொள்வர்.

37. அதிகமான ஜாவளிகள் அமைந்துள்ள மொழி தெலுங்கு என்பதை அறிந்து கொள்வர்.

38.வீட்டுப் பாவனைப் பொருட்களைக் கைகளில் வைத்துக்கொண்டு ஆடும் ஆடல் ஏந்தல் நடனம் என்பதை அறிந்து கொள்வர்.

39.மிஸ்ர அலாரிப்பின் தீர்மானப் பகுதியில் இடம்பெறும் தக ததிங் கிண தொம்,; தக ததிங் கிணதொம்,; தகததிங் கிண தொம், என்பது அமைந்துள்ள யதி அமைப்பு சம யதி என்பதைத் தெரிந்து கொள்வர்.

40.திக்கிட - உதரக - டன் - கிண்ணம் என்னும் பாடலடி இடம்பெறும் கௌத்துவம் கணபதி கௌத்துவம் என்பதை அறிந்து கொள்வர்.

41. தில்லானா என்ற உருப்படியில் அழகுக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் அடவு மெய்யடவு என்பதை அறிந்து கொள்வர்.

42.தக ஜெணு தகுந்தரி என்பதன் எண்ணிக்கைக்குச் சமனாக அமையும் பிறிதொரு அமைப்பு தக திமி தகதிமி என்பதைத் தெரிந்து கொள்வர்.

43.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கௌரவ முதுகலைமாணிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நாட்டியக் கலைஞர் திரு. ந. வீரமணி ஐயர் என்பதை அறிந்து கொள்வர்.

44.அதீதம், அநாகதம், சமம் ஆகிய பிரிவுகளைக் கொண்டது க்ரஹம் என்பதை அறிந்து கொள்வர்.

45.நாட்டிய நாடகம் ஒன்றில் மங்கள இசை, பிரகாசமான ஒளி என்பவற்றின் மூலமாகப் புலப்படுத்தப்படும் காட்சி சுவாமி திருவீதி உலா வருதல் என்பதைத் தெரிந்து கொள்வர்.

46.நாயக்கர் காலத்தில் மெலட்டூர் பாகவத மேளா நாட்டிய நாடகத்தில் பங்கேற்றவர்கள் அந்தணர்கள் என்பதை அறிந்து கொள்வர்.

47.நடராஜ திருவுருவத் தத்துவத்தில் ஊன்றிய திருவடி குறிப்பது ஆணவத்தை அழித்தல் என்பதை தெரிந்து கொள்வர்.

48.குயிலே உனக்கனந்த கோடி நமஸ்காரம் குமரன் வரக்கூவுவாய்.... என்ற தூதுப் பதத்தை இயற்றியவர் சுத்தானந்த பாரதி என்பதை அறிந்து கொள்வர்.

49.தீர்மானம் ஒன்றினை அமைக்கும் போது மிகப் பொருத்தமான சொற்கட்டு தீனுத தத்திமி தாகத ஜெம் என்பதைத் தெரிந்து கொள்வர்.

50.சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முதல்வராக நியமிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சிவானந்தம் பிள்ளை என்பதை அறிந்து கொள்வர்.

முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Sri Lanka Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නැටුම් (භරත) II
நாட்டியம் (பரதம்) II
Dancing (Baratha) II

53 T II

09.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**
* பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) நீர் குறிப்பிட்ட பதவர்ணத்தின் பாடலை எழுதியவர், நாட்டிய அமைப்புச் செய்தவர், நாயகன், நாயகி ஆகியோரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   (iii) (அ) இந்தப் பதவர்ணத்தின் பல்லவிப் பகுதி முடிவடைய இடம்பெறும் தீர்மானத்தை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (08 புள்ளிகள்)
   (ஆ) இப் பதவர்ணத்தின் முக்தாய்ஸ்வரக் கோர்வை ஒன்றினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (06 புள்ளிகள்)

2. “தரண” என்ற நிருத்த உருப்படியைக் கொண்ட சாஸ்திரிய நடனத்தைப் பின்வரும் அடிப்படைகளில் விளக்குக.
   (i) தோற்றம் (03 புள்ளிகள்)
   (ii) வளர்ச்சி (03 புள்ளிகள்)
   (iii) இசை, இசைக்கருவிகள் (02 புள்ளிகள்)
   (iv) ஆடல் முறை (06 புள்ளிகள்)
   (v) ஆடை, அணிகலன், ஒப்பனை (06 புள்ளிகள்)

3. (i) (அ) நான்கு வகை நாயகர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ஆ) அவர்களின் இலட்சணங்களை உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)
   (ii) (அ) சிருங்கார நாயகர்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (ஆ) அவர்களின் பிரிவுகளைக் குறிப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி II

4. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) ஸ்தானக பேதம்
   (ii) பொம்மலாட்டம்
   (iii) பர்வதயதி
   (iv) விபாவம்
   (v) ஆரபடி விருத்தி

(04 × 5 = 20 புள்ளிகள்)

5. கலாஷேத்ரா நிறுவுனரான திருமதி.ருக்மணி அருண்டேல் அவர்களது முதற்குருவின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் பரதக் கலைக்கு ஆற்றிய பணிகளையும் தொகுத்து எழுதுக. (20 புள்ளிகள்)

6. "ஆலயங்களே ஆடற்கலையினைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தன" இக்கூற்றினை சோழர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

7. (i) அபிநயம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) நான்கு வகை அபிநயங்களையும் குறிப்பிட்டு, அவற்றின் உட்பிரிவுகளையும் தருக. (08 புள்ளிகள்)

(iii) பரதநாட்டிய ஆற்றுகை ஒன்றில் நான்கு வித அபிநயங்கள் வகிக்கும் பங்களிப்பினை உதாரணங்கள் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்)

8. "பரதநாட்டிய ஆற்றுகை ஒன்றில் உடை, ஒப்பனை, அணிகலன்கள், ஒலி, ஒளி, அரங்க அமைப்பு ஆகியவற்றின் பங்களிப்புகள் மேலோங்கும்போது ஆற்றுகை வெளிப்பாடானது மட்டுப்படுத்தப்படுகின்றது" இக்கூற்றின் பொருத்தப்பாடு பற்றிய உமது கருத்துகளை எடுத்துரைக்குக. (20 புள்ளிகள்)

* * *

## பகுதி II

**வினா - 1**

i. பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிட்டிருப்பின் - (02 புள்ளிகள்)

ii. பதவர்ணத்தின் பாடலை எழுதியவர், நாட்டிய அமைப்பு செய்தவர், நாயகன், நாயகி ஆகியோரைக் குறிப்பிட்டிருப்பின் - (04 புள்ளிகள்)

iii. அ. பதவர்ணத்தின் பல்லவிப்பகுதி முடிவடைய இடம்பெறும் தீர்மானத்தை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதியிருப்பின் - (08 புள்ளிகள்)

ஆ. பதவர்ணத்தின் முக்தாய்ஸ்வரக் கோர்வை ஒன்றினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதியிருப்பின் - (06 புள்ளிகள்)

**வினா - 2**

"தரண" என்ற நிருத்த உருப்படியைக் கொண்ட சாஸ்திரிய நடனமாகிய கதக் நடனத்தின்,

i. தோற்றம் பற்றி விளக்கி இருப்பின் - (03 புள்ளிகள்)

ii. வளர்ச்சி பற்றி விளக்கி இருப்பின் - (03 புள்ளிகள்)

iii. இசை, இசைக்கருவிகள் பற்றி விளக்கி இருப்பின் - (02 புள்ளிகள்)

iv. ஆடல் முறை பற்றி விளக்கி இருப்பின் - (06 புள்ளிகள்)

v. ஆடை, அணிகலன், ஒப்பனை பற்றி விளக்கி இருப்பின் - (06 புள்ளிகள்)

**வினா - 3**

i. அ. நான்கு வகை நாயகர்களைக் குறிப்பிட்டிருப்பின் - (02 புள்ளிகள்)

ஆ. அவர்களின் இலட்சணங்களை உதாரணங்களுடன் விளக்கி இருப்பின் - (08 புள்ளிகள்)

ii. அ. சிருங்கார நாயகர்களைக் குறிப்பிட்டிருப்பின் - (02 புள்ளிகள்)

ஆ. அவர்களின் பிரிவுகளைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் - (08 புள்ளிகள்)

**வினா - 4**

i. ஸ்தானக பேதம் - (04 புள்ளிகள்)

ii. பொம்மலாட்டம் - (04 புள்ளிகள்)

iii. பர்வத யதி - (04 புள்ளிகள்)

iv. விபாவம் - (04 புள்ளிகள்)

v. ஆரபடி விருத்தி - (04 புள்ளிகள்)

**வினா - 5**

கலாஷேத்ரா நிறுவுனரான திருமதி ருக்மணி அருண்டேல் அவர்களது முதற்குருவாகிய மயிலாப்பூர் கௌரி அம்மாளது வாழ்க்கை வரலாற்றையும், அவர் பரதக்கலைக்கு ஆற்றிய பணிகளையும் தொகுத்து எழுதியிருப்பின் - (20 புள்ளிகள்)

**வினா - 6**

ஆலயங்களே ஆடற்கலையினைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தன இக்கூற்றினை சோழர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கி இருப்பின் - (20 புள்ளிகள்)

**வினா - 7**

i. அபிநயம் என்றால் என்னவென விளக்கி இருப்பின் - (02 புள்ளிகள்)

ii. நான்கு வகை அபிநயங்களையும் குறிப்பிட்டு, அவற்றின் உட்பிவுகளைத் தந்திருப்பின் - (08 புள்ளிகள்)

iii. பரதநாட்டிய ஆற்றுகைக்கு நான்குவித அபிநயங்கள் வகிக்கும் பங்களிப்பினை உதாரணங்கள் மூலம் விளக்கியிருப்பின் - (10 புள்ளிகள்)

**வினா - 8**

பரத நாட்டிய ஆற்றுகை ஒன்றில் உடை, ஒப்பனை, அணிகலன்கள், ஒலி, ஒளி, அரங்க அமைப்புப் பற்றி விளக்கி, இவற்றின் வெளிப்பாடானது மேலோங்கும் போது ஆற்றுகை வெளிப்பாடானது மட்டுப்படுத்தப்படுகின்றது என்ற கூற்றின் பொருத்தப்பாடு பற்றி தனது கருத்துக்களை எடுத்துரைப்பின் - (20 புள்ளிகள்)

## இரண்டாம் பகுதி வினாக்களுக்கான குறிக்கோள்கள் பற்றிய அறிமுகம்

### பகுதி I

1. i. பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றை எழுதிக் காட்டுவர்.

   ii. பதவர்ணத்தின் பாடலை எழுதியவர், நாட்டிய அமைப்புச் செய்தவர், நாயகன், நாயகி ஆகியோரை எழுதுவர்

   iii. அ) பதவர்ணத்தின் பல்லவிப் பகுதி முடிவடைய இடம் பெறும் தீர்மானத்தை தாள அங்கக் குறியீட்டினை அனுசரித்து எழுதிக் காட்டுவர்.

   ஆ) பதவர்ணத்தின் முக்தாய்ஸ்வரக் கோர்வையினை தாள அங்கக் குறியீட்டினை அனுசரித்து எழுதிக் காட்டுவர்.

2. தரண என்ற நிருத்த உருப்படியைக் கொண்ட சாஸ்த்திரிய நடனத்தை அதன் தோற்றம், வளர்ச்சி, இசை , இசைக் கருவிகள், ஆடல் முறை, ஆடை, அணிகலன், ஒப்பனை ஆகிய விடயங்களின் அடிப்படைகளில் விளக்கி எழுதிக் காட்டுவர்.

3. i. அ) நான்கு வகை நாயகர்களை குறிப்பிட்டு எழுதுவர்.

   ஆ) நாயகர்களின் இலட்சணங்களை உதாரணங்களுடன் விளக்கி எழுதிக் காட்டுவர்.

   ii. அ) சிருங்கார நாயகர்களைக் குறிப்பிட்டு எழுதிக் காட்டுவர்

   ஆ) சிருங்கார நாயகர்களின் பிரிவுகளைக் குறிப்பிட்டு விளக்கி எழுதுவர்.

### பகுதி II

4. ஸ்தானக பேதம், பொம்மலாட்டம், பர்வதயதி, விபாவம், ஆரபடிவிருத்தி ஆகிய விடயங்களை அறிந்து சுருக்கக்க குறிப்பு எழுதிக் காட்டுவர்.

5. கலாஷேத்திரா நிறுவுனரான திருமதி ருக்மணி தேவி அருண்டேல் அவர்களது முதற் குருவின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் பரதக் கலைக்கு ஆற்றிய பணிகளையும் அறிந்து எழுதுவர்.

6. சோழர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு ஆலயங்கள் எவ் வெவ் வகைகளில் ஆடற் கலையினைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தன என்பதை அறிந்து எழுதிக் காட்டுவா்.

7. i. அபிநயம் என்றால் என்னவென்று விளக்கி எழுதுவர்.

   ii. நான்கு வகை அபிநயங்களையும் குறிப்பிட்டு அவற்றின் உட்பிரிவுகளையும் விளக்கி எழுதிக் காட்டுவர்.

   iii. பரத நாட்டிய ஆற்றுகைக்கு நான்கு விதமான அபிநயங்களும் எவ்வெவ் வழிகளில் பங்களிப்பு செய்கின்றன என அறிந்து எழுதிக் காட்டுவர்.

8. உடை, ஒப்பனை, அணிகலன்கள், ஒலி, ஒளி, அரங்க அமைப்பு ஆகியவற்றின் பங்களிப்புக்கள் மேலோங்கும் போது பரத நாட்டிய ஆற்றுகை வெளிப்பாடானது மட்டுப்படுத்தப்படுகின்றது என்ற கூற்றின் பொருத்தப்பாடு பற்றிய தமது கருத்துக்களை எழுதிக்காட்டுவர்.

பகுதி II

01.

i. **நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக.**

இராகம் :- ஆனந்தபைரவி / தன்யாசி

தாளம் :- ஆதி / ஆதி (02 புள்ளிகள்)

ii. **நீர் குறிப்பிட்ட பதவர்ணத்தின் பாடலை எழுதியவர், நாட்டிய அமைப்புச் செய்தவர், நாயகன், நாயகி ஆகியோரைக் குறிப்பிடுக.**

**ஆனந்தபைரவி**

பாடலை எழுதியவர் - தஞ்சை சிவானந்தம்

நாட்டிய அமைப்பு - கலாஷேத்திரா / திருமதி ருக்மணிதேவி அருண்டேல்

நாயகன் - திரோதாத்தன் / உத்தமநாயகன்

நாயகி - விரஹோத்கண்டிதா, வாசகசச்சிகா

**தன்யாசி**

பாடலை எழுதியவர் - பாபநாசம் சிவன்

நாட்டிய அமைப்பு - பத்மஸ்ரீ அடையார் கே. லக்ஷ்மணன்

நாயகன் - ஷடன்

நாயகி - விரஹோத்கண்டிதா (04 புள்ளிகள்)

## பல்லவி முடிவடைய வரும் தீர்மானம்

இராகம் : ஆனந்தபைரவி

தாளம் : ஆதி

1. ................................ / ................ / ........ தளாங்கு தககிகு //

தக ததிங்கிணதொம், தீனுத தத், திமி தாஹத ஜெம், தத ஜெம் ;

த ஜெம்; த / ரும்; திமிதகிட திதுமிததகதிமி / தாஹத ஜெம், ததஜெம்;த ஜெம்; த //

ரும் ; திமிதகிட தீனு திமிதகிட திமிதகிடத

தக கிடததகததக / திகு தக தத், தித், தக், கிடதக தரிகிட தொம்,/தக தத், தித், தக், கிடதக தரிகிட தொம், தக//

தத், தித், தக், கிடதக தரிகிட தொம், ; ; தத் ; தணா தத்; தணா தத் ; த/ ணா..........................

இராகம் : தன்யாசி

தாளம் : ஆதி

1. தரித், ததகஜொணுதாம் தகததிமித கிடதக தணத், த ஜொணு ஜொணு தாம் தக /ததிமித கிடதக தரித், த தணா, / தணத், த ஜொணு ; ஜொணுத், த திமி ; //

திமித், த கிட; தரித், த தணதணத், தஜொணு ஜொணுத், த, திமிதிமித், தகிட /தரித், த தணத், த ஜொணுத், த திமித், த /தத், த தஜொணு தஜொணு தாம்கிடதக //

தகத தஜொணு தஜொணு தாம்கிடதக ததரி, தணத ஜொணு, ஜொணு / ததிமி, தகிட தக திகு ததிங் கிண தொம் /ததரீ தணத ஜொணு, ஜொணு //

ததிமி, தகிட தகதிகுததிங்கிண தொம் ததரீ தணத ஜொணு, ஜொணு/ததிமி, தகிட தகதிகு ததிங்கிணதொம்/,தகதிகுததிங்கிண தொம், தகதிகு ததிங்கிண தொம்//

08 புள்ளிகள்

iii. அ. இப்பதவர்ணத்தின் முக்தாய்ஸ்வரக் கோர்வை ஒன்றினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

**பதவர்ணம்**

இராகம் : ஆனந்த பைரவி

தாளம் : ஆதி

## முக்தாயிஸ்வரம்

**கோர்வை I**

தெய், ; தத், தெய், தத் தெய், தாஹா தெய், ; தித் , தெய், தித், தெய், தாஹா / தெய், ; தத், தெய்,; தாஹா ; / தித், தெய், தாஹா தெய், ; ; ; //

தெய், ஹத், தெய், ஹி, தெய், ஹத் , தெய், ஹி, தெய், ஹத், தெய், ஹி,

தெய், திதிதெய், திதி / தெய், தெய், திதி தெய்,;

தெய், திதி தெய், / திதிதெய், தெய், திதி, தெய்,;தெய்திதி //

தெய், திதிதெய், தெய், திதி தெய், ; ; தத் ; தணா தத் ; தணாதத் ; த / ணா ........................................

**கோர்வை II**

தெய், யும், தத், த, தெய், யும், தா ; தெய்,யும், தத், த, தெய்,யும், தா ; / தெய்,யும், தத்,த தெய்,யும்,தா;/ தெய,யும், தத்,த, தெய்,யும், தா; //

தத்,தெய், தாம் ; தித், தெய், தாம் ; தத் தெய், தாம் ; தித், தித், தெய், ; / தத், தெய், தாம் ; தித், தெய், தாம் ; / தத், தெய், தாம் ; தித், தித், தெய், ; //

தெய், தெய், தாம் ; தெய், ஹத், தெய்,ஹி, தெய், ஹத், தெய், ஹி, த, க, தி, மி, / த , கி, ட, தெய், திதி தெய், த, க, / த, கி, ட, தெய், திதி தெய், த, க, //

த, கி, ட, தெய், திதி தெய், ; ; தத் ; தணா தத் ; தணா தத் ; த / ணா ................................

06 புள்ளிகள்

iii. ஆ. இப்பதவர்ணத்தின் முக்தாய்ஸ்வரக் கோர்வை ஒன்றினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

**பதவர்ணம்**

இராகம் : தன்யாசி
தாளம் : ஆதி

|4 O O

தத், தெய், தாம் ; தித், தெய், தாம் ; தெய், ; தெய், ; தெய்,; தெய், ; / தா ; தெய், ; தெய், ; த, ; / தெய், ; தெய்,; தெய்,; தெய்,; //
த, க, த, கி, ட, த, கி, ட, த, கி, ட, த, கி, ட, த, க, / தெய், ஹத், தெய், ஹி, தெய், ஹத்,
தெய், ஹி, / தெய்,ஹத், தெய்,ஹி, தெய், ஹத், தெய், ஹி, //
தா ; தெய்,; தெய், ; த, ; தித், ; தெய், ; தெய், ; த, ; / த, க, த, கி, ட, த, க, த, / கி, ட, த, கி, ட, த, கி, ட, //
தெய், ஹத், தெய்,ஹி, தெய், ஹத், தெய், ஹி, தெய், ஹத்,
தெய், ஹி, தெய், ஹத், தெய்,ஹி, / தெய்,யா தெய்,யி, தெய், திதிதெய், ; / ; தெய், திதிதெய், ; தெய் ,திதிதெய், //

**கோர்வை II**

தெய், ; தித், தாம் ; தெய், தெய், தாம் ; தெய், ; தெய், ; தெய், தெய், தாம் / தெய், யா தெய்,யா தெய்,யி, த, க, / தி, மி, தெய்,யா தெய் , யா, தெய், யி,
த, க, த, கி, ட, த, க, த, கி, ட, திதிதெய், திதிதெய், திதிதெய், / த, ; க, ; தி, ;மி, ; / த, ; க, ; தி, ; மி, ; //
த, தெய், தெய், த, தி, தெய், தெய், த, த, தெய், தெய், த, தி, தெய், தெய், த, / தெய், ஹத், தெய், ஹி, தெய்,
தெய், திதி தெய், / தெய், ஹத், தெய், ஹி, தெய், தெய், திதி தெய், //
த, கி, ட, த, கி, ட, த, கி, ட, த, கி, ட, த, க, தி, மி, / தெய், திதி தெய், ; ; தெய், தெய், திதி / தெய், ; ; தெய், தெய், தெய், திதிதெய், //

**02. "தரண" என்ற நிருத்த உருப்படியைக் கொண்ட சாஸ்திரிய நடனத்தைப் பின்வரும் அடிப்படைகளில் விளக்குக.**

i. **தோற்றம்**

★ வட இந்தியாவிற்குரிய நடனமாகும்.

★ ராஜஸ்தான், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத் முதலிய மாநிலங்களில் நிலவி வருகின்றது.

★ கோயில்களில் இந் நடனம் ஆடப்பட்டமைக்கு அங்குள்ள சிற்பங்கள் சான்று.

★ இந்நடன பாணியின் தொடக்கத்தினைச் சமண ஓவியங்களிலும், கல்ப சூத்திரம் போன்ற ஏட்டுச் சுவட்டுகளிலும் காணலாம்.

★ கதக் நடனம் வட இந்திய பக்தி இயக்கத்தின் தாக்கம் பெற்று வளர்ந்து வந்த நடனமாகும்.

(3 புள்ளிகள்)

ii. **வளர்ச்சி**

★ கிருஷ்ணன் – ராதை, கிருஷ்ணன் – கோபிகள் ஆகியோரை மையமாகக் கொண்ட கிருஷ்ண வணக்கம் சிறப்புற்று விளங்குகிறது.

★ கதை கூறுவோர், பாணர் ஊர் ஊராகச் சென்று புராணக் கதைகள், நாடோடிக் கதைகள், பழைய கதைகள் மூலம் மகிழ்வித்தனர்.

★ கிருஷ்ண லீலைகள் பற்றிய கதைகள் தோன்றின. இவை தெய்வீக நடனக்காரன் என்ற "நடவர" என்னும் பதம் மூலம் கிருஷ்ணரை அழைத்தனர்.

★ ராஜஸ்தானிலே மக்களின் அழகிய ஆடைகள், அரச மாளிகைகள் கோவில்கள் ஆகியவற்றில் அவர்களின் கலையுணர்வு சிறப்பாகக் காணப்படுகிறது.

★ இன்றைய கதக் வடிவம் லக்னௌவிலே உருவாக்கப்பட்டது.

★ தகுர் பிரசாத்தின் மக்களான பிந்ததின் மஹராஜ், கல்க பிரசாத், பைரோன் பிரசாத் தமது தகப்பனாரின் பணியினை தொடர்ந்து செய்தனர்.

★ ஜய்ப்பூர் கலைஞர்களின் புத்திரர்களான ஹரி பிரசாத், ஹனுமான் பிரசாத் இந் நடனத்தில் சிறந்து விளங்கியவர்கள்.

(3 புள்ளிகள்)

iii. **இசை, இசைக்கருவிகள்**

- ஹிந்துஸ்தானி இசை
- 17 ஆம் நூற்றாண்டு முன் மிருதங்கம், மஞ்சிரா, பக்கவாஜ் ஆகியன பயன்படுத்தப்பட்டன.
- 17 ஆம் நூற்றாண்டின் பின் தபேலா சாரங்கி, ஹார்மோனியம் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

(2 புள்ளிகள்)

iv. **ஆடல் முறை**

- துரித காலத்தில் ஆரம்பித்து பிறகு சௌக்க காலத்தில் முடிந்து மீண்டும் துரித காலத்தில் ஆடப்படும்.
- நாட்டிய சாஸ்திரம் கூறும் உத்ப்ளவனங்கள், ப்ரம்மரிகளுடன் ஒப்பிடக்கூடிய துள்ளல்களும், சுற்றாட்டங்களும் கதக்கில் காணப்படும்.
- பரதம் போலவே நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்ற பிரிவுகளைக் கொண்டது.
- ராச லீலைகள் நாட்டிய நாடகப் பாணியிலேயே பாவம் அபிநயம் முக்கியத்துவம் பெற்றது.
- பாய்தல், சுற்றுதல், கண், கழுத்து புருவ அசைவுகள் 3 காலங்களிலும் ஆடல் காணப்படுகிறது.
- நடனமாடுபவரின் பாத அசைவுகளும், தாளவாத்தியமும் முழுமையாக ஒருங்கே செயற்படும்.

- தாண்டவ லாஸ்ய நிலைகள் நன்கு சமப்படுத்தி ஆடப்படும்.
- நன்கு பயிற்சி பெற்றவர் கண்களைக் கட்டிக் கொண்டு அரிசி மாவைத் தூவி உள்ள நிலத்திலே கால்களினால் மயில், யானை வடிவங்களை வரைந்தபடி நடனம் ஆடுவர்.
- தோராக்கள் எனப்படும் சொற்கட்டுக்கள், நிருத்தம், நிருத்தியம் இரண்டும் காணப்படும். திதே திக் திக் சொற் பிரயோகங்கள் தபேலாவுடனும் கிட் தூ துன் துன் பக்க வாஜ"டனும் இணைந்து ஒலிக்கும். பக்தி ரஸம் நிறைந்தது. அபிநயம், லயம் பிரதானமானவை. அமத், சங்கீத், பரண், தரண முதலான உருப்படிகள் இதில் உண்டு.
- காலில் கட்டியுள்ள 100 சதங்கைகளில் 7,12 சதங்கைகள் மட்டும் ஒலிக்கும் வகையில் ஆடல் இடம்பெறும்.

(6 புள்ளிகள்)

V. **ஆடை, அணிகலன், ஒப்பனை**

- பெண்கள் சுரிதார், பிஜாமா அணிவர். ஆண்கள் பிஜாமா ஜிப்பா அணிந்து அங்கவஸ்திரம் கட்டி ஆடுவார்கள். அத்துடன் இந்துக்கள் பட்டுவேட்டியும் சால்வையும் கட்டி ஆடுவர்.
- பெண்கள் தலையில் இரட்டைப் பின்னலோ அல்லது ஒன்றைப் பின்னலோ போட்டுக் கொள்வர்.
- முக்காடு போன்ற மேலணி அணிவர்.
- சதங்கை (குங்குல் எனப்படும் சதங்கை) அணிவர்.
- ஜிமிக்கி, அட்டியல், மாலை, இடுப்புச்சங்கிலி போன்ற ஆபரணங்கள் தங்கத்திலும் அணிவர்.
- பரதநாட்டியம் போல் முகத்திற்கு எளிமையான அலங்காரம் செய்து கொள்வர்.
- பாரம்பரியமான கதக் நடனத்தில் ஆண்கள் அலங்கரிக்கப்பட்ட தொப்பியினை அணிந்து கொள்வர்.

(6 புள்ளிகள்)

**03.**

i.

**அ) நான்கு வகை நாயகர்களைக் குறிப்பிடுக.**

- திரோதாத்தன்
- திரோத்தன்
- தீரலலிதன்
- தீரசாந்தன்

(2 புள்ளிகள்)

**ஆ) திரோதாத்தன்**

- தன்னடக்கம் உள்ளவன்.
- கர்வம், சூது, வாது, அகம்பாவம் அற்றவன்.
- தன்னம்பிக்கை, உடலுறுதி, மனவுறுதி, வீரம், அறிவு ஆகிய குணங்களைக் கொண்டவன்.
- தற்பெருமை அற்றவன்.
- எத்தொழிலையும் மனதில் பதியவைத்து ஒழுங்காகச் செய்து முடிப்பவன்.
- புத்திகூர்மையுடையவன்.

உதாரணம் : ஸ்ரீராமன்

**திரோதத்ததன்**

- கர்வம் உள்ளவன்.
- தற்புகழ்ச்சி, கோபம், பெருமை, அவசரபுத்தி உடையவன்.
- கோபம் கொள்பவன்.
- பொறாமையுள்ளவன்.
- மந்திரமாய வித்தைகளுக்கு உடன்படுபவன்.
- தான் சொன்னதை மற்றவர்கள் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பவன்.
- இவ்வாறு நற்குணங்கள் அற்றவனாகக் காணப்படுவான்.

உதாரணம் :- துரியோதனன்.

**தீரலலிதன்**

- தன்னடக்கமுள்ள நாயகன்.
- கவலையும் யோசனையும் அற்றவனாயிருப்பான்.
- இளகிய மனமுடையவன்.
- எல்லோருடனும் மகிழ்ச்சியாகவும், சுமூகமாகவும் பழகுவான்.
- கலைகளிலும், சாஸ்திரங்களிலும் ஆர்வம் மிக்கவன்.

உதாரணம் : ஸ்ரீ கிருஷ்ணன்.

**தீரசாந்தன்**

- தன்னடக்கம், கட்டுப்பாடு, அமைதி, சாந்தம், பொறுமை ஆகிய குணங்களை உடையவன்.
- பொதுவாகப் பிராமண குலத்தைச் சேர்ந்தவனாக இருப்பான்.
- மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்டவனாகவும், பரிசுத்தமான மனங்கொண்டவனாகவும் விளங்குவான்.

உதாரணம் : புத்தர்

(8 புள்ளிகள்)

ii.

**அ) சிருங்கார நாயகர்களைக் குறிப்பிடுக.**

- பதி
- உபபதி
- வைசிகன்

(2 புள்ளிகள்)

**ஆ) அவர்களின் பிரிவுகளைக் குறிப்பிட்டு விளக்குக.**

**அனுகூலன்**

- உத்தமமான கணவன்.
- மிகுந்த சாமார்த்தியம் உள்ளவன்.
- கனவிலும் மனைவியை அகலாதவன்.
- மனைவியின் விருப்பங்களை உடனுக்குடன் பூர்த்தி செய்பவன்.

உதாரணம் : ஸ்ரீராமன்

**தக்ஷிணன்**

- தன் ஆசைக்குப் பாத்திரமான எல்லாப் பெண்களிடமும் ஏற்றத்தாழ்வின்றி பிரியம் வைப்பான்.

  உதாரணம் : தசரதச் சக்கரவர்த்தி, அர்ஜுனன்.

**திருஷ்டன்**

- நாயகிக்கு அபராதம் செய்த பின் தன்னை மன்னிக்கும்படி வேண்டுவதிலும், அப்படிச் செய்யமாட்டேன் எனக் கூறுவதிலும் அலுக்காதவன்.

  உதாரணம் : கண்ணபிரான்

**சடன்**

- தன்னிடம் பிரியமுள்ள நாயகிக்கு அவள் அறியாது துரோகம் செய்பவன். அல்லது நாயகியின் மனம் நோகுமாறு நடந்து கொள்பவன்.

  உதாரணம் : ஸ்ரீ கிருஷ்ணன். (8 புள்ளிகள்)

**04. பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

i. **ஸ்தானக பேதம்**

ஸமபாதம் ஜகபாதம் நாகபந்தம் ததஹ்பரம்
ஐந்தரம்ச காருடம் சை ப்ரம்ஹஸ்தான பிதிக்ரமாத்

கருத்து:

- ஸம்பாதம், ஏகபாதம், ததஹபரம், ஐந்தரம் காருடம் ப்ரம்ஹஸ்தாளம் ஆகிய ஆறு ஸ்தாளக பேத வகையாகும்.

(4 புள்ளிகள்)

ii. **பொம்மலாட்டம்**

- பொம்மைகளாக தம்மை பாவனை செய்து ஆடும் கிராமிய ஆடல் வடிவம்.
- பொம்மைகள் இரண்டடி உயரமுடையதாகவும், ஒரே மரத்தின் மேல் செய்த தலையை உடையதாகவும் அமைந்திருக்கும்.
- கை கால்களில் கந்தல் துணிகளைத் திணித்து அவற்றில் விரல்களைப் பொருத்தியிருப்பார்கள்.
- கண்கள் சாதாரண கண்களை விடப் பெரிதாக அமைக்கப்பட்டு பார்ப்பவர்களை கவர்ந்திழுக்கும் தன்மை உடையதாக இருக்கும்.
- பொம்மைகளுக்கு இடுப்பின் கீழ் கால்களை தனியாக அமைப்பதில்லை. அதற்குப் பதிலாக கீழாடைகள் தொங்கும் வண்ணம் போடப்பட்டிருக்கும்.
- சில பொம்மைகள் அதிக எடையில்லாத மரத்தால் செய்யப்பட்டிருக்கும். வங்காளத்தில் ஒரு வகை கம்பி பொம்மைகள் செய்யப் பயன்படுத்தப்பட்டிருக்கும்.
- உத்தர பிரதேசத்திலும், கேரளத்திலும் கையுறை பொம்மைகள் பயன்படுத்தப்படுகின்றன. பொம்பலாட்டம் தோல் பொம்மலாட்டம், நிழல் பொம்மலாட்டம் என இரு வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- பொம்மலாட்ட கலைஞர்கள் பல குரலில் ஏற்ற இறக்கம் கொடுத்து பேசுவதிலும், பாடுவதிலும் வல்லவர்கள். (4 புள்ளிகள்)

iii. **பர்வதயதி**

- இதனை ஸ்ரோதோவஹ யதி என்றும் அழைப்பர்.
- பர்வதம் என்பது மலை, சிகரம் என்று பொருள்படும்.
- மேலே சுருங்கியும் போகப் போக யதி அமைப்பு விரிவடைந்தும் காணப்படும்.

உதாரணம் :

தொம்
கிணதொம்
திங் கிண தொம்
த திங் கிண தொம்
தகத திங்கிண தொம்

(4 புள்ளிகள்)

iv. **விபாவம்**

- ஒரு உணர்வு தோன்றக் காரணமாய் இருப்பது விபாவம் எனப்படும். இது அங்க அசைவுகள், முகபாவங்கள் வார்த்தைகள் வழியே தெளிவாக உணர்த்தப்படுகின்றது. இது இரண்டு வகைப்படும்.
  1. ஆலம்பன விபாவம்
  2. உத்தீபன விபாவம்
- ஆலம்பன விபாவம் எனப்படுவது இரஸத்தோடு நேரடியான தொடர்புடையது. உத்தீபன விபாவம் எனப்படுவது இரஸ உணர்வை அதிகரிக்கச் செய்யும் அழகு, வடிவு, இளமை, ஆண்களைக் கவரும் சேஷ்டைகள், அலங்காரம், சூழ்நிலைகள் ஆகியனவாகும். (4 புள்ளிகள்)

v. **ஆரபடி விருத்தி**

- விருத்தி என்னும் சொல் செயல் என்று பொருள்படும். அதாவது சொல், மனம், செயல் எனும் மூன்றும் இணைந்த செயற்பாடு விருத்தி எனப்படும். அதாவது ஒரு கருத்தைப் பிறர் அறியும் வண்ணம் எடுத்துச் சொல்லும் முறையாகும். விருத்தியால் பேச்சு, பாவம், கை கால்களின் அசைவு, நடை இவைகளின் செயற்பாடே நான்காக வகுக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு வகையே ஆரபடி விருத்தி ஆகும். ஆரபடி அரசர்களுடன் நடந்த விரைவும் உணர்வும் மிகுந்த பல்வகை நடை பிரயோகங்களுடன் கூடிய விசித்திர கரணங்களைக் கொண்டது. மேலும் வீறு கொண்ட சினம், சூழ்ச்சிகள், வஞ்சனைகள், வீண் தற்பெருமைகள், தம்பங்கள், பொய்யுரைகள் என்பவையும் காணப்படும் இதில் நான்கு வகைகள் உள்ளன. அவையாவன ஸம்க்ஷிப்தகம், அவபாதம், வஸ்தூத்தாபனம், ஸம்பேடம் என்பனவாம்.

(4 புள்ளிகள்)

**05. கலாஷேத்ரா நிறுவுனரான திருமதி ருக்மணி அருண்டேல் அவர்களது முதற்குருவின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் பரதக் கலைக்கு ஆற்றிய பணிகளையும் தொகுத்து எழுதுக.**

- மயிலாப்பூர் கௌரியம்மாள் 1892 இல் நான்காவது குழந்தையாக பிறந்தார்.
- இவரது தந்தை மயிலாப்பூர் ரட்ணம், தாய் துரைக்கண்ணம்மா.
- இசை, நடனம் ஆகிய இரண்டிலும் நன்கு தேர்ச்சியடைந்தவர்.
- நெல்லூர் முனுஸ்வாமி நட்டுவனாரிடம் நடனத்தினை பயின்றார்.
- கௌரியம்மாள் இசையை ஆரம்பத்தில் தன் தாயிடமும், பின்னர் பொன்னுஸ்வாமி, திருப்பனந்தான் பட்டாபிராமையாவிடமும் பயின்றார்.
- அபிநயம் செய்வதில் சிறந்து விளங்கினார்.
- சிறந்த குரல் வளம் கொண்டிருந்தமையால் தானே பாடி அபிநயிப்பார்.
- 03.01.1932 இல் இசை அகடமியில் இவர் ஆற்றுகை செய்த நடன நிகழ்ச்சி பெரும் பாராட்டைப் பெற்றது.
- ஆந்திர மாநில சமஸ்தானங்கள் பலவற்றில் ஆடிப் பெருமளவில் சன்மானம் பெற்றவர்.
- 1932 இல் திரு ஈ. கிருஷ்ணையர் இசை அகடமியில் நடத்திய நாட்டிய நிகழ்ச்சிகளைப் பார்த்து இவர் ஒரு சிறந்த நடனக் கலைஞர் என வெளிப்படுத்தினார்.
- பாடல்களுக்கு நடனமாடுவது, நடனம் அமைப்பது, நடனம் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பது இவரது சிறப்பான அம்சங்களாகும்.
- இயல்பாகவே நாட்டியக்கலையை வெளிப்படுத்துவதற்கேற்ற முக அமைப்புடையவர்.
- பிரபல நடனக் கலைஞரான பத்மாசுப்பிரமணியம் இவரிடம் நடனக் கலையினைப் பயின்றார்.
- இவரிடம் காலாநிதி பத்மாசுப்பிரமணியம், டி.பாலசரஸ்வதி ஆகியோரும் பயின்றனர்.
- மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் இணைந்த கடைசி தேவதாசி இவர்.
- தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை எதிர்த்தமையால் தனது வீடு தொழில் ஆகியவற்றை இழந்தார்.
- இவரது சொந்த பிள்ளைகளால் வறுமைக் கோட்டிற்குள் தள்ளப்பட்ட போதும் நடனம் கற்பிப்பதை கைவிடவில்லை.
- மைலாப்பூரிலிருந்து கால்நடையாகவே தியாகராயர் நகர் சென்று நடனத்தினை கற்பித்தார்.
- அபிநயத்தில் இணையற்ற மயிலாப்பூர் கௌரியம்மாள் 21.01.1971 இல் இயற்கை எய்தினார்.

(20 புள்ளிகள்)

**06.'ஆலயங்களே ஆடற் கலையினைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தன' இக்கூற்றினை சோழர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

- சோழர் காலத்தில் ஆலயங்கள் கலைகளின் உறைவிடம்.
- சாந்திக் கூத்து, வினோதக் கூத்து, தமிழ்க்கூத்து, ஆரியக் கூத்து என ஆடல் காணப்பட்டது.
- ஆலய வழிபாட்டில் சமயச் சடங்குகளுடன் நடனக் கலை இணைந்திருந்தது.
- ஆடல் அளிக்கைக்கான இடம், ஆடற் கலைஞர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகிய அனைத்தும் ஆலயங்களால் மேற்கொள்ளப்பட்டன.
- அகமார்க்க நட்டுவம், அபிநய நட்டுவம் என இரு பிரிவுகளாக ஆடல் ஆலயங்களில் இடம்பெற்றமை கல்வெட்டுக்கள், சிற்பங்கள் வாயிலாக அறியமுடிகிறது.
- இறைவன் முன்னிலையில் வைகறை ஆட்டங்கள் என ஆடல் இடம் பெற்றுள்ளது.
- தேவரடியார்கள் அகமார்கத்தை ஆலயங்களில் நிகழ்த்தியமையைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

- சாந்திக் கூத்தின் பிரிவான அபிநயக் கூத்து, வினோதக் கூத்து ஆகியன ஆங்காங்கே கோயில்களில் ஆடப்பட்டன.
- ஆலயத்தில் நடனம் நித்திய, நைமித்தியக் கிரியைகளில் நிகழ்த்தப்பட்டுள்ளது. நிருத்தியோபசாரம் என்ற வழிபாட்டு முறை இடம்பெற்றமைக்குச் சான்றுகள் உண்டு .
- ஆடற் கலைஞர்களான தேவரடியார்களுக்கு உதவும் முகமாக நட்டுவர்களும், தலைக்கோலிகளும் இருந்தனர்.
- ஆடற் கலைஞர்களின் வாழ்விடங்களாகவும், ஆடற்கலை பயிலும் இடங்களாகவும் தளிர்ச் சேரிகள் காணப்பட்டன.
- ஆடற்கலையைக் கற்பிப்பவர்களுக்கு ஆலயங்கள் நிபந்தம் வழங்கின.
- ஆலயங்கள் இந்த நட்டுவ ஆசான்களுக்கு வழங்கிய காணிகள் நட்டுவக்காணி, கூத்தக்காணி என அழைக்கப்பட்டன.
- திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் திருக்கோயிலில் 22 தளியிலார்க்கு ஆடல் கற்பித்த ஆடலாசானுக்கு 60 வேலி நிலத்திலிருந்தும் வருவாய் மூலம் ஊதியம் வழங்கப்பட்டது.
- ஆலயங்களிலேயே இருந்து நட்டுவனார்கள் ஆடற்கலையை வளர்த்தனர் என கல்வெட்டுக்கள் கூறுகின்றன.
- ஆடற் கலையைப் பயில ஆலய மண்டபங்கள் உதவின.
- ஆலயங்களில் நிருத்த மண்டபம், நானாவித நாடகசாலை, அம்பலம் முதலான மண்டபங்களில் ஆடல் இடம்பெற்றுள்ளது.
- இறைவன் திருவீதியுலா வரும் போது ஆடல் நிகழ்ந்துள்ளது.
- விழாக்கால ஊர்வலங்களில் ஆடல்கள் இடம்பெற்றதை ஆலய சிற்பங்களும், கல்வெட்டுக்களும் கூறுகின்றன.
- தளியிலார், பதியிலார் என்ற இரு வகை ஆடற்கலைஞர்கள் இருந்தனர்.
- ஆடற் கலையில் சிறந்தவர்களுக்கு தலைக்கோலி பட்டம் வழங்கப்பட்டது.
- தலைக்கோலியர் ஆடல் ஆசான்களாக விளங்கியமை “பெருங்கதைப் பாடல்” வழி அறியலாம்.
- ஆடற்கலைஞர்களுக்கும், நட்டுவனார்களுக்கும் ஊதியமாக நெல் வழங்கப்பட்டதாக சாசனங்கள் கூறுகின்றன.
- ஆடலில் சிறந்தவர்களுக்கு முத்து மகுடம், திருக்கொற்றக் குடை, மகுடம் முதலியன அரசினால் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது.
- நடனசாலைகள் அமைக்கப்பட்டு நடனம் வளர்க்கப்பட்டமையைக் கல்வெட்டுக்களும், திருப்பதிகங்களும் கூறுகின்றன.
- நடன நிலைகளைப் பிரதிபலிக்கும் சிற்பங்கள் ஆலயங்களில் காணப்படுதல் ஆடற்கலையை ஆலயங்கள் பாதுகாத்தமைக்குச் சான்று.
- ஆலயங்களில் வரையப்பட்டுள்ள நடன ஓவியங்கள் நாட்டிய சாஸ்திரத்தைப் பின்பற்றி வரையப்பட்டதாகக் காணப்படுகிறது.

(20 புள்ளிகள்)

07.

i. **அபிநயம் என்றால் என்ன?**

அபி என்பது முன் என்று பொருள்

- நயம் என்ற பதத்தின் வினைப்பகுதியான “நீ” என்பதற்கு “அடைவித்தல்” என்பது பொருள்
- அபிநயம் என்பது பார்ப்பவர்கள் முன்கொண்டு வருதல் எனப் பொருள்படும்.
- ஒரு எண்ணக் கருவை அங்க அசைவுகளாலும், முகபாவங்களாலும் வெளிப்படுத்துதல் என்றும் கூறலாம்.
- கதாபாத்திரத்தின் தன்மையையும் மென்மையான உணர்வுகளையும் அவ்வப் பாத்திரங்களின் பல்வேறு வகையான மனோபாவங்களையும் பார்ப்பவர்கள் கண்டு இரசிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டதே அபிநயம்.

(2 புள்ளிகள்)

ii. **நான்கு வகை அபிநயங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் உட்பிரிவுகளையும் தருக.**

ஆங்கிகா அபிநயம்

வாச்சிகா அபிநயம்

ஆஹார்யா அபிநயம்

சாத்விகா அபிநயம்

**ஆங்கிகா அபிநயம்**

1. அங்கம் 2. பிரத்தியாங்கம் 3. உபாங்கம்

**வாச்சிகா அபிநயம்**

1. சுகீத வாச்சிகம் 2. உபகீத வாச்சிகம் 3. சுசப்த வாச்சிகம்
4. உபசப்த வாச்சிகம்

**ஆஹார்ய அபிநயம்**

1. புஷ்டம் 2. அலங்காரம் 3. அங்கரச்சனம்
4. சஞ்சீவம்

**சாத்விக அபிநயம்**

1. ஸ்தம்பம் 2. ஸ்வேதம் 3. ரோமான்சம்
4. ஸ்வரபேதம் 5. வேபதும் 6. வைவர்ணயம்
7. அஷ்ரு 8. பிரளயம்

(8 புள்ளிகள்)

iii. **பரதநாட்டிய ஆற்றுகை ஒன்றில் நான்கு வித அபிநயங்கள் வகிக்கும் பங்களிப்பினை உதாரணங்கள் மூலம் விளக்குக.**

ஆற்றுகை நிகழ்வில் அபிநயங்கள் முக்கிய இடம் பெறுகின்றது.

அங்க பிரத்தியங்க, உபாங்கங்களால் வெளிக்காட்டப்படும் அபிநயம் ஆங்கிகா அபிநயம் ஆகும். பாடலின் கருத்தினை முத்திரைகளாலும், பாவங்களாலும், உடல் அங்கங்களினூடாக வெளிக்காட்டும் போது ஆற்றுகை வெற்றி பெற்று ரஸ உற்பத்தி உருவாக ஆங்கிக அபிநயம் உதவுகின்றது. உதாரணம் போர்வீரனின் குணவியல்புகளை வெளிப்படுத்துவதற்கு உடல் உறுப்பக்களின் வேறுபட்ட அசைவுகள் உதவுகின்றன.

வாச்சிகா அபிநயம் என்பது வார்தைகளினால் வெளிப்படுத்தப்படுவது ஆகும் பாடல்கள், உரையாடல்கள், ஜதிகள் ஊடாக வாசிகா அபிநயம் வெளிப்படுத்தப்படுகிறது. இவை ஆற்றுகையாளர்கள் தன் உள்ளக்கருத்தை சபைக்கு எடுத்துக் கூற உதவுகின்றன. தெளிவான உச்சரிப்பு ஒலி வேறுபாடு, ஓசை நயம், மொழிநயம், ஜதிகள், சொற்கட்டுக்கள் முதலியனவற்றினூடாக ஆற்றுகை செய்வதைக் குறிப்பிடலாம்.

**ஆஹார்ய அபிநயம் :**

ஆடை, அணிகலன்களால் வெளிப்படுத்தப்படும் அபிநயம். ஒரு கதாபாத்திரத்தின் லக்ஷணங்களைப் பார்வையாளர்களுக்கு விளக்கிக் கூற இது பயன்படுத்தப்படுகிறது. முடி மார்புப்பட்டி, அரைஞாண் முதலான அணிகலன்களை உள்ளடக்கிய நிஜாகார்யாபிநயம், கதாபாத்திர வேடம் பூண்டு அபிநயிக்க உதவும் அபிசாரி ஆஹார்யம், ஆற்றுகை செய்யப்படும் பிரதேசங்களுக்கேற்றவகையில் ஆடை ஆபரணங்களை அணிந்து ஆடும் வியபிசாரி ஆஹார்யம் என்பன இதில் அடங்கும் முடி, பட்டாடை, தங்க ஆபரணங்கள், கேடயம், வாள் முதலியவற்றுடன் அரச பாத்திரம் ஆற்றுகை செய்தல்.

**சாத்விக அபிநயம் :**

உள்ளத்தில் உருவாகும் உணர்ச்சிகளின் வெளிப்பாடு சாத்வீக அபிநயம். உணர்ச்சிகளின் மேலீட்டினால் இயல்பாகவே தோன்றி உடலில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. ஸ்தம்பித்திருத்தல், மூர்ச்சித்தல், புல்லரித்தல், வியர்வை, நிறமாற்றம், நடுக்கம், கண்ணீர், குரல் மாற்றம் ஆகிய எட்டுவகை உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்படுகின்றன. உ+ம் :- சபைநடுவே துரியோதனனால் துகிலுரியப்பட்ட பாஞ்சாலி என்னும் பாத்திர வெளிப்பாடு.

(10 புள்ளிகள்)

08. **'பரதநாட்டிய ஆற்றுகை ஒன்றில் உடை, ஒப்பனை, அணிகலன்கள், ஒலி, ஒளி, அரங்க அமைப்பு ஆகியவற்றின் பங்களிப்புக்கள் மேலோங்கும் போது ஆற்றுகை வெளிப்பாடானது மட்டுப்படுத்தப்படுகின்றது" இக்கூற்றின் பொருத்தப்பாடு பற்றிய உமது கருத்துக்களை எடுத்துரைக்குக.**

- அளவுக்கதிகமான ஆகார்ய அபிநய வெளிப்பாடு ஆங்கிக அபிநயத்தின் வெளிப்பாட்டை மட்டுப் படுத்துவதால் ஆற்றுகை சிறப்பாக இடம்பெறுவதில்லை.

- பார்வையாளரின் கவனம் உடை ஒப்பனையில் செல்வதால் ஆற்றுகை மீதான பார்வைக் குவிப்பு நலிவடைகிறது ஆகார்ய அபிநயம் அதிகமாகும் போது ஏற்படும் பாதகமான விளைவாகிறது. அதாவது உடை ஒப்பனை என்பன மிகைப்படுத்தப்படுமிடத்து. ஆற்றுகை வெற்றியளிப்பதில்லை.

- ஆரம்பகாலங்களில் ஒரு கட்டுக்கோப்பான முறையில் ஆகார்ய அபிநயம் கையாளப்பட்டு வந்தது. உதாரணம் பொருத்தப்பாட்டுடனான சேலை அணிதல், ஆபரணங்களை அளவோடு அணிந்து கொள்ளுதல், முகத்தில் அளவான பூச்சுக்களை கையாளுதல்.

- தற்காலத்தில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மேற்குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் ஆற்றுகைகளில் மிகையாகப் பயன்படுத்துவது ஒரு தடையாகக் காணப்படுகிறது.

- ஆடற்கலைஞரின் ஆற்றுகை வெளிப்பாடு, ஆடலின் முழுமையான அமைப்பு ஆகியவற்றை இரசிப்பதற்கு தடையாக அமையும்.

- அதிக ஒலி, மீள் ஒலி வாச்சிக அபிநயத்தை தெளிவாக வெளிப்படுத்துவதை தடை செய்யும் இதனால் ஆற்றுகை வெற்றியளிக்காது.

- ஒலிபெருக்கி ஒலி வாங்கிகளது அதீதமான ஒலிபரப்பால் ஆற்றுகையாளரின் கருத்து வெளிப்பாட்டில் விளக்கம் இன்மை ஏற்படுகிறது.

(20 புள்ளிகள்)

**எல்லா வினாக்களுக்கும் மாணவர்களின் விடைக்கேற்பப் புள்ளிகளை வழங்கவும்**